[12th February 1958

Handloom weavers.

* 62 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to give relief to the Handloom Weavers who are not members of the Co-operative Societies?

The Hon. Sri R. VENKATARAMAN : A scheme was formulated and forwarded to the All-India Handloom Board for obtaining financial aid from the Cess Fund for forming 10 Co-operative Marketing Societies for the benefit of independent weavers and small master weavers who have under their control not more than 10 looms. A loan of Rs. 12 lakhs and a grant of Rs. 66,520 from the cess fund were applid for. The implementation of the scheme was contingent upon the allotment of funds by the All-India Handloom Board or the Government of India from the cess fund. A sub-committee of the All-India Handloom Board, recently investigated the question of extending financial aid from the Cess Fund to weavers outside the co-operative fold. The Committee submitted its report to the All-India Handloom Board. The Government of India have not yet considered the recommendations of the Committee. As regards the scheme mentioned above, the Scheme Committee of the Board decided that it cannot be considered till the Government of India arrive at a decision on the question of assistance for weavers outside the co-operative fold. The scheme was therefore returned to this Government by the Board.

Sri N. K. PALANISAMI : சர்க்கார் இதற்காக ஒரு கமிட்டியை அமைத்து, அதன் அறிக்கையின் பேரில் நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே நமது சர்க்கார் இதற்கு பரிகாரம் காண எந்த விதமான நடவடிக்கையை எடுக்கப்போகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இன்று இருக்கின்ற நிலையில் செஸ் நிதியிலிருந்து செய்கின்ற உதவி பூராவும் கூட்டுறவு இயக்கத்திற்கு உபயோகப்படுத்த முடிவதில்லை. அப்படி உபயோகப்படுத்துவதாக இருந்தால் மத்திய சர்க்காரிலிருந்து அனுமதி வேண்டும். மேலும் இது ஒரு அகில இந்திய பிரச்னையாதலால் அவர்கள் ஒரு முடிவிற்கும் வரவில்லை.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கத்தில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களை விட வெளியே இருக்கும் நெசவாளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில், ஆலைகளில் விற்கப்படும் நூலின் விலையைக் குறைத்து நெசவாளர்கட்கு விற்க அரசாங்கம் திட்டமிட முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கூட்டுறவு இயக்கத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் மிகக் குறைவு என்பது பழைய விஷயம். இப்பொழுது ஒரு லட்சத்து 96 ஆயிரம் பேர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருக்கிறார்கள். மேலும் 50 சதமாவது ஒரு வருஷத்தில் சேருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. சங்கத்தின் வெளியே அதிகமான தறிக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லாத்தறிக்காரர்களுக்கும் சலுகை காட்ட வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் ஓர் இரண்டு ஸ்கீம்களை தயாரித்து அனுப்பியிருக்கிறோம். ஆனால் அந்த கொள்கையை மத்திய சர்க்கார் எற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவதாக நூல் வினியோகத்

12th February 1958]

தைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டுவருகிறது. எல்லாக் கைத் தறியாளர்களுக்கும் நூல் வினியோகம் செய்ய வேண்டும் என்பதற் காகத்தான் இப்பொழுது இரண்டு நூல் நூற்பு ஆலைகளை ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Sri N. K. PALANISAMI : சாக்கார் இதற்காக ஒரு கமிட்டியை அமைத்து, அதன் அறிக்கையின் பேரில் நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை ஆகவே நமது சர்க்கார் இதற்கு பரிகாரம் காண எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா.

The Hon. Sri R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கிற திட்டத்தில் செஸ் நிதியில் செய்கின்ற உதவி பூராவும் கூட்டுறவு சங்கத்தின் மூலம்தான் கிடைத்துவருகிறது. இதை விஸ்தரிக்க பல முறை மத்திய சர்க்காருக்கு எழுதியும் பயன் இல்லை. இது ஒரு அகில இந்திய பிரச்னை யாதலால் இதைப்பற்றி சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவில்லை. எல்லா கைத் தறிகாரர்களுக்கும் சலுகை அளிக்கவேண்டுமென்ற காரணத்தால் ஓர் இரண்டு ஸ்கீம்களைத் தயாரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறோம். ஆனால் அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் இந்தத் தறிக்காக நூல் விநியோகிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. நமது மாகாணத்தில் இரண்டு நூல் நூற்பு ஆலை தொழிற்சாலை ஏற் படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

Sri M. K. MARIAPPAN : கூட்டுறவு இயக்கத்தில் இருக்கும் நெச வாளர்களுக்கு மார்க்கட்டிங் சொஸைடி உதவ முன்வந்திருந்தும்கூட அவைகளை பயன் படுத்தாதற்கு காரணம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்கு மத்திய சர்க்காரிட மிருந்து நிதி உதவி கிடைத்தாலொழிய இயக்கத்தின் வெளியே உள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

Sri T. T. DANIEL : Such of those weavers who have got their own looms and who have got the capacity to take shares in Co-operative Societies can become members of the Co-operative Societies. Will the Government be pleased to relax those two conditions so that a large number of weavers outside the Co-operative fold can get the benefit?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, out of Rs. 50, which is share capital of a Member of a Co-operative Society, he has to pay Rs. 12·50. The balance is advanced to him as loan. Therefore we do not think there is any great difficulty for weavers to join the Co-operative Society. Secondly, where there are large number of weavers without looms, Government have a scheme for organizing industrial co-operatives of loomless weavers.

* Sri R. KRISHNASAMI NAIDU : எல்லா தொழிலாளிகளையும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்றதன் நோக்கம், எல்லா கைத்தறி நெசவாளர்களும் பயன் அடையவேண்டும் என்பதற் காகத்தான், அப்படியிருக்கும்பொழுது இயக்கத்தில் சேராததற்குக் காரணம் கூட்டுறவு இயக்கம் அவர்களை கவர்ச்சிக்கவில்லை என்ற காரண மாகவா அல்லது வேறு எந்த காரணத்திற்காகவே அவர்கள் சங்கத்தில் சேரவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : கூட்டுறவு இயக்கத்தில் முதலில் 99 ஆயிரம் நெசவாளர்களிலிருந்து ஒரு லட்சம் 90 ஆயிரத் திற்கு உயர்ந்திருக்கிறது. இதில் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சேர வேண்டும். ஒரே அடியாக சேருவதென்பது அவசர காரியம் ஆகும்.